**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>**

**<u>OS.No. 57/2021</u>**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.எஸ்.சங்கர்கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 17.06.2026**

**பெயர் – ஜானகி**

**க/பெ – யுவராஜ்**

**வயது – 56**

**ஊர் – திருவொற்றியூர்**

**தொழில் – ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் : 11.55 A.M**

<u>முதல் விசாரணை :-</u>

1. நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். எனது வாக்குமூலம் கூடுதல் பிரமாண பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன், அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 30.09.1970 தேதியிட்ட ஆவண எண்.1555/1970 என திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 20.03.2021 தேதியிட்ட சாத்தாங்காடு காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட C.S.R நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளிநகல்) **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. புதிய புலஎண்.273/90 பழைய புலஎண்.581/1பா மற்றும் புதிய புலஎண்.273/111 பழைய புலஎண்.581/1பா நிலத்திற்கான மனைவரி தோராயப்பட்டாவின் உண்மை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட் ஒளிநகல்) **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. புதிய புலஎண்.273/41 பழைய புலஎண்.581/1பா நிலத்திற்கான மனைவரி தோராயப்பட்டாவின் உண்மை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட் ஒளிநகல்) **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(முதல் விசாரணை முடிந்தது)

**விசாரணை முடியும் நேரம்:– 12.15 P.M.**